# ஹபராதுவ பிரதேச சபை

# காலி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூலை 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 13 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹபராதுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய மூலதன உதவி ரூபா 1,461,771 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் திரண்ட நிதிய மற்றும் கடன்பட்டோர் ரூபா 1,461,771 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 2,459,699 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் மீளாய்வாண்டின் போது அக் கொடுப்பனவு ரூபா 2,459,699 தொகையினை கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் திரண்ட நிதியம் ரூபா 2,459,699 இனால் மிகையாகவும் கடன்கொடுத்தோர் ரூபா 2,459,699 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பணமாற்றக் கணக்கு என காட்டப்பட்டிருந்த ரூபா 26,600,000 இற்கான வரவு மற்றும் செலவு மீதிகள் ஆண்டு இறுதியில் ஒவ்வொரு கணக்கையும் செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 355,626 இற்கான கடனைத் திருப்பி செலுத்துதல் குறிப்பிட்ட கடன் கணக்குகளில் பதிவு செய்யப்படாமையால் கடன் கணக்கு ரூபா 355,626 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டு தொடர்பாக பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 354,431 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 354,431 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) முன்னைய ஆண்டுகளின் முத்திரை கட்டணப் பெறுவனவு ரூபா 649,415 தொகையினை நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 649,415 இனால் மிகையாகவும் பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 645,966 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் திரண்ட நிதியம் ரூபா 645,966 வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த ஊழியர் சேமலாப நிதி நலன்கள் ரூபா 153,300 முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் நீதி மன்றத் தண்டப் பண வருமானம் என காட்டப்பட்டமையை சரி செய்யப்பட்டமையால் திரண்ட நிதியம் ரூபா 153,300 இனால் மிகையாகவும், ஊழியர் சேமலாப நிதிய வைப்புக்கள் அதே தொகையால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய ஆண்டின் போது உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு வட்டியாகக் செலுத்தியிருந்த ரூபா 50,510 தொகை உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி கடன் கணக்கிற்கு வரவு வைத்திருந்ததை சரிசெய்யப்படாமையால் திரண்ட நிதியம் ரூபா 50,510 தொகையினால் மிகையாகவும், உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் மீதி ரூபா 50,510 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஊழியர்கள் தொடர்பாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்பு ரூபா 5,870,837 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 457,050 பொறியும் பொறித் தொகுதியும், ரூபா 263,900 இற்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் ரூபா 2,070 இற்கான நூலகப் புத்தகங்கள் கொள்வனவு உட்பட கூட்டுத்தொகை ரூபா 723,020 இற்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஔ) பிரதான பேரேட்டின் பிரகாரம் திரண்ட நிதியம் மற்றும் ஒதுக்க மீதி ரூபா 36,726,616 உம் மற்றும் நிதிக் கூற்றுக்களின் மீதி ரூபா 35,919,531 என குறிப்பிட்டுள்ளமையால் ரூபா 807,085 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(க) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா 430,790 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 521,252 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் நிலையான வைப்புக்கள் ரூபா 90,462 இனால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(ச) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 22 நிர்மாண வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய மூலதன உதவி ரூபா 11,577,830 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் ரூபா 11,577,830 வீதம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஞ) மீளாய்வாண்டின் போது ரூபா 736,430 இற்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் கொள்வனவு செய்தல் நிதிக் கூற்றுக்களில் மீண்டுவரும் செலவுகள் என காட்டப்பட்டிருந்தது.

(ட) முன்னைய ஆண்டின் போது 34 நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த மூலதன உதவி ரூபா 16,270,926 தொகையினை ஆண்டிற்கான மூலதன உதவி பெறுவனவு என காட்டப்பட்டிருந்தமையால் மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் ரூபா 16,270,926 வீதம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ண) மீளாய்வாண்டின் நிர்மாண வேலை கணக்கிற்கு பொதுக் கணக்கில் இருந்து மாற்றப்பட்ட ரூபா 3,000,000 தொகை ஆண்டிற்கான மூலதன உதவி பெறுவனவு என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மூலதன உதவி வருமானம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(த) மீளாய்வாண்டின் போது மடொல்துவ பிரதான இறங்கு துறையினை அண்மித்து நிர்மாண வேலைகளுக்காக மூலதன உதவிகள் பெறுவனவு ரூபா 126,651 தொகை வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளமையால் அதே தொகையால் மூலதன உதவி குறைவாகவும், வைப்புக்கள் மிகையாகவும் காட்டப்பட்டுள்ளது. அந்த நிர்மாண வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 100,357 தொகையினை முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளமையால் மூலதன செலவுகள் ரூபா 100,357 இனால் குறைவாகவும், முற்பணக் கணக்கு அதே தொகையால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(ந) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட சம்பள முற்பணம் ரூபா 115,500 இனை தீர்க்கும் போது முற்பணக் கணக்கில் பதிவு செய்யப்படாமையால் முற்பணக் கணக்கு அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ப) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆயுள்வேத இருப்பு ரூபா 120,966 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 283,319 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 162,353 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ம) மீளாய்வாண்டு அக்டோபர் 13 திகதி செலுத்தியிருந்த ரூபா 33,750 இற்கான முற்பணங்கள் பெற்றுக்கொள்ளாமல் மற்றும் முற்பணத் தீர்த்தல் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ய) மீளாய்வாண்டின் போது பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 207,704 இற்கான முற்பணங்கள், ரூபா 195,411 தொகை சீட்டைகள் சமர்ப்பித்ததன் மூலமும் மற்றும் ரூபா 12,293 பணமாகவும் செலுத்தி தீர்க்கப்பட்டிருந்த போதும், ரூபா 76,750 இற்கான செலவுகளை உதவி நிதி பங்களிப்புத் தொகை மானியம் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருக்காமையால் மற்றும் ரூபா 195,411 இற்கான தொகையின் முற்பணக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்காமையால் நிதிக் கூற்றுக்களில் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 76,750 இனால் குறைவாகவும், முற்பணக் கணக்கின் மீதி ரூபா 195,411 இனாலும் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 7,843,909 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 54,448,897 தொகை எனினும், மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகைக் கணக்கின் மீதி ரூபா 52,968,897 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 1,480,000 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 தொங்கல் கணக்கு

--------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 25,633 இற்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 106,586,096 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், முறைப்படி பேணப்பட்ட கடன்கொடுத்தோர் பதிவேடு மற்றும் கடன்பட்டோர் பதிவேடு, காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 18,275,341 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 56,181,896 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வீத வரி

-------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 6,096,521 இற்கான வீத வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

---------------

(ை) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 202,377 இற்கான வாடகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ை ை) கதலுவ உப அலுவலத்தை சேர்ந்த இலக்கம் 01 மற்றும் 02 கொண்ட இரண்டு கடைகளுக்காக ரூபா 69,945 இற்கான வாடகை நிலுவையாகக் காணப்பட்டது. அதே போல் 06 கடைகள் தொடர்பாக உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 02 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஹபராதுவ புதிய வர்த்தக தொடர்கட்டிடத் தொகுதியில் தரை மாடியில் காணப்படும் காட்சி கூடத்தின்

உடன்படிக்கையின் 04 ஆவது நிபந்தனைக்கு முரணாக பிரிக்கப்பட்டு வேறாக்கப்பட்டு சேர்ப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 182,119 இற்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 198,198 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 அதிகாரம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு கல்விச் சுற்றுலா

---

பிரதேச சபை நிதியத்தினை பயன்படுத்துவது பற்றிய சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்டுள்ள விடயங்களின் கீழ் காணப்படாத கருமம் ஒன்றான 03 வெளிநாட்டு கல்விச் சுற்றுலாவுக்காக அங்கத்தவர்கள் மற்றும் செயலாளருக்கு ரூபா 3,661,896 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. அதே போல் வெளிநாடு செல்வதற்காக முறையான அங்கீகாரமும் பெற்றிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கத்திற்கு ரூபா 200,000 செலுத்துதல்

---

பிரதேச சபை நிதி பயன்படுத்துதல் தொடர்பாக சட்ட ஏற்பாடுகள் வழங்கியுள்ள 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்டுள்ள விடயங்களின் கீழ் காணப்படாத கருமம் ஒன்றான மந்திரிமார் மற்றும் அலுவலக ஊழியர்களின் 2014 ஆண்டிற்கான வினோத சுற்றுலாவிற்காக பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கத்திற்கு ரூபா 2,000,000 தொகை ஒன்று 2014 திசெம்பர் 31 திகதி 276 ஆம் இலக்க உறுதிச் சான்றின் மூலம் பிரதேச சபையின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) விழாச் செலவுகள்

--------------------------------

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுவான முக்கியத்துவம் உடைய கருமங்கள் பற்றிய விழா செலவுகள் தொடர்பாக ஒரு வருடத்திற்கான மொத்தக் கூட்டுத்தொகை ரூபா ஒரு ஆயிரத்தை விஞ்சாத வகையில் காணப்பட வேண்டும். அத்துடன் அதனை மிகைக்கும் இடைத்து அதற்காக அமைச்சரின் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 160,227 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சமர்ப்பிக்காமை

------------------------------------------------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் 2014 ஆண்டின் போது சபையின் தலைவர் தவிர ஏனைய 12 அங்கத்தவர்களினால் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை.

(ஆ) அனுப்பப்படாத வரி

---------------------------------

சபையினால் வழங்கப்படுகின்ற பல்வேறு சேவைகள் தொடர்பாக 2012, 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது அறவீடு செய்திருந்த ரூபா 2,022,594 இற்கான பெறுமதி கூட்டிய வரி உம், ரூபா 361,860 இற்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் ரூபா 194,127 இற்கான முத்திரை வரி கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூலை 17 திகதி வரை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டு திறமையின்மை

------------------------------------------------

எசஸ அசிரிய நிகழ்ச்சித் திட்டம்

----------------------------------------------------------

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 515,700 தொகை செலவு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132(ஓ) பிரிவின் கீழ் 2014 அக்டோபர் 09 ஆந் திகதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மொத்தச் செலவுகள் ரூபா 614,407 தொகை எனினும், ரூபா 161,262 இற்கான செலவுகள் தொடர்பாக உறுதிச் சான்றுகள் சமர்ப்பித்திருக்கவில்லை. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து மொத்த வருமானம் ரூபா 161,000 தொகை எனினும், அவ் வருமானத்தை சேகரிக்கும் போது பயன்படுத்திய பற்றுச் சீட்டுக்களுக்குரிய அடியிதழ்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

3.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 அக்டோபர் 08 திகதி முதல் பெக்கோ இயந்திரம் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டு கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஏப்ரல் 10 திகதி வரை தலைமை அலுவலக வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. அதே போல் கப் வண்டி ஒன்று, டிரக்டர் ஒன்று, கைடிரக்டர் ஒன்று மற்றும் நீர் பவுசர் ஒன்றும் ஐந்து வருடங்களுக்கு மிகையான காலம் முதல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. அவ்வாறாயினும் பெக்கோ இயந்திரத்திற்காக 2014 ஆண்டின் போது ரூபா 381,029 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டு 02 ரிம்கள் மற்றும் முன்பக்க இரண்டு டயர்கள் மற்றும் 2 டியூப்கள் மற்றும் உபகரண தொகுதி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவையும் தலைமை அலுவலகத்தில் களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அதே போல் பெக்கோ இயந்திரம் மற்றும் ஏனைய 04 வாகனங்களை திருத்துவதற்கு அல்லது அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2012 பெப்ரவரி 27 திகதி தலைமை அலுவலக மற்றும் அஹங்கம உப அலவலகத்திற்கு சபை நிதியத்தில் இருந்து ரூபா 78,500 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த இரண்டு நேரப் பதிவு இயந்திரங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூலை 17 வரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------

சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 11 வாகனங்களின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் சபையினால் நடத்தப்படுகின்ற போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஏப்ரல் 11 திகதி வரை அவ் வாகனங்களின் உரிமை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

--------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்